முனைவர் கு.சங்கீதா.,MA.,B.Ed.,Ph.D.,
தமிழ்த்துறை,உதவிப் பேராசிரியர்
அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி - கரூர்.

# தண்டியலங்காரம்

**அலகு 1**

தன்மை, உவமை - உருவகம்

**அலகு 2**

தீவகம் - வேற்றுப்பொருள் வைப்பணி-ஒட்டணி -தற்குறிப்பு

**அலகு 3**

ஏது-நுட்பம்- இலேசம்-நிரல்நிறையணி-சுவையணி

**அலகு - 4**

தன் மேம்பாட்டுரை - பரியாயம் - சிலேடை-அவநுதி

**அலகு - 5**

ஒப்புமை - மாறுபடு புகழ்நிலை-புகழாப்புகழ்ச்சி - வாழ்த்து- பாஷகம்

**தமிழ் இலக்கணம்**

- தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து வகையாம். ஐவகை இலக்கணமுடைய நூல்கள் தொல்காப்பியம்,வீர சோழியம், தொன்னூல் விளக்கம்,இலக்கண விளக்கம்.
- ஐவகை நூல்களில் மிகுந்த செல்வாக்குடைய நூல் தண்டியலங்காரம். அலங்காரம் என்றால் அணி (அழகு) என்று பொருள்.
- ஆசிரியர் : தண்டி
- காலம் : 12-ஆம் நூற்றாண்டு
- அரங்கேற்றம் : அனபாயன் அவை(இரண்டாம் குலோத்துங்க சோழன்).
- தண்டியலங்காரத்தின் முதல் நூல் வடமொழியில் தண்டி என்பவர் எழுதிய காவிய தரிசனம் என்ற நூல்.
- இந்நூலுக்கு முதலில் அணியதிகாரம் என்ற பெயற் இருந்தது என்பது பழைய உறையால் அறிய முடிகிறது.

**நூல் அமைப்பு**

1) பொது அணியியல் - 26
2) பொருளணியியல் -65
3) சொல்லணியியல்-35

**மூன்று இயல் 126 நூற்பாக்கள்**

- பொதுவணியியலுக்குக் குணவியல் என்ற பெயருமுண்டு.
- சொல்லணியியலுக்கு எச்சவியல் என்ற பெயருமுண்டு.
- தமிழில் காப்பிய இலக்கணத்தை முதன் முதலில் கூறிய நூல் தண்டியலங்காரம்.

**பொதுவணியியல்**

செய்யுள் வகை -4

- தனித்து நின்று முடிவது முத்தகச் செய்யுள்
- பல பாட்டு ஒரு வினை கொள்வது களகச் செய்யுள்
- பாட்டுக்கள் பல தொகுக்கப்படுவது தொகைநிலைச் செய்யுள்
- பொருளிலும் சொல்லிலும் தொடர்வது தொடர்நிலைச் செய்யுள்

**பொருளணியியல்**

35 வகை அணிகளையும் இலக்கணத்தையும் தெளிப்படுத்துவது இவ்வியலாம்.

- முதல் அணி -தன்மையணி
- இறுதி அணி -பாவிகயணி

**சொல்லணியியல்**

- மடக்கு,சித்திரம் ஆகியவற்றின் இலக்கணம் கூறுகிறது.
- இதழ் ஒட்டாமல் பாடுவது நீரோட்டகம்
- இந்நூலுக்கு உரையெழுதியவர் சுப்பிரமணிய தேசிகர்

**பொருளணியியல்**

- பொருளினால் ஆகும் அணிகளின் இயல்பைக் கூறுவதால் பொருளணியியல் என்னும் பெயரைப் பெற்றது. இவ்வியல் 64 நூற்பாக்களை கொண்டது.

**பொருளணியியல் வகைகள்**

1) தன்மையணி
2) உவமையணி
3) உருவக அணி
4) தீவக அணி

5 பின்வருநிலையணி

முதலான 35 அணிகள் இவ்வியலில் காணப்படுகின்றது. இதில் 21 அணிகள் பாடமாக வைக்கப்பட்டுள்ளன.

## அலகு 1

தன்மை, உவமை, உருவகம்

**தன்மையணி**

**“எவ்வகைப் பொருளும் மெய்வகை விளங்கும்**

**சொற்களைமுறையாக தொடுப்பது தன்மையணி”**

- ஒரு பொருளின் இயல்புத்தன்மையை நேரில் கண்டாற் போல உள்ளபடி விளக்குவது தன்மையணி
- தன்மை என்பதற்கு இயற்கை (இயல்பு) என்பது பொருள். இதனைத் தன்மை **நவிற்சி** என்றும் குறிப்பிடுவர்.
- வடநூலார் இதனைச் **சுவபாவோக்தி** அலங்காரம் என்பர்.

**தன்மை அணியின் வகைகள்**

**நான்கு வகைகள்**

1) பொருள்

2)குணம்

3) சாதி

4) தொழில்

**உவமையணி**

- தொல்காப்பிய பொருளதிகாரத்தில் உவமையணி எனும் தனி இயலில் உவமை அணியின் இயல்புகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.ஒருவன் தான் கூறக் கருதிய பொருளை அதனோடு ஒப்புமை உடைய மற்றொரு பொருளோடு இயைபுபடுத்திக் கூறுவது உவமை அணியாகும்.

- கண்ட பொருளைக் கொண்டு காணாத பொருளினைவிளங்கக் காட்டுவதும் உவமை அணியாகவே கருதப்படும். இவ்வுவமையே பிற அணிகளுக்கு எல்லாம் தாயாக விளங்கும் தன்மை கொண்டது.

**உவமை அணியின் பொது இலக்கணம்**

**"பண்பும் தொழிலும் பயனும் என்று இவற்றின்**
**ஒன்றும் பலவும் பொருளோடு பொருள் புணர்த்து**
**ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை"**

பண்பு, தொழில், பயன் ஆகியவற்றின் காரணமாக உவமை பிறக்கும். அது ஒன்றாகவோ பலவாகவோ வருகின்ற பொருளோடு பொருந்தும்படி வைக்கப்படும்.இத்தன்மையால் கேட்போர் உணர்ந்து கொள்ளுமாறு ஒப்புமைப் புலப்படும் வண்ணம் எடுத்துரைப்பதே உவமை அணியாகும்.

**உவமையின் வகைகள்**

உவமையின் வகைகள் - 24

விரி உவமை முதல் மாலை உவமை வரை

**(1)விரி உவமை**

பொருளுக்கும் உவமைக்கும் இடையில் பொதுத்தன்மை வெளிப்பட்டு நிற்பது.

**(2) தொகை உவமை**

பொதுத்தன்மை வெளிப்பட்டு வாராமல் மறைத்துக் கூறப்படுவதே தொகை உவமை.

**(3) இதர விகர உவமை**

பொருள் ஓரிடத்து உவமையாகவும் உவமை ஓரிடத்துப் பொருளாகவும் ஒரு தொடருக்குள்ளே இரண்டடிகளாய் அமையப் பாடுவது.

**(4) சமுச்சய உவமை**

ஒன்றை ஒப்பது ஒரு காரணத்தால் அன்றி வேறு பலவற்றானும் ஒக்கும் எனக் கூறுவது.

**(5) உண்மை உவமை**

ஒரு பொருளுக்கு வேறொரு பொருளை உவமையாகக் கூறியப் பின்னர் அதனை மறுத்துப் பொருளையே கூறி முடிப்பது.

**(6) மறுபொருள் உவமை**

ஒரு பொருளுக்குப் பிறிதொரு பொருளை உவமையாகக் கூறி அப்பொருளுக்கு நிகராவதொரு பொருளைப் பின்னரும் வைத்து உவமிப்பது.

**(7) புகழ்தல் உவமை**

உவமையைப் புகழ்ந்து உவமிப்பது புகழ்தல் உவமை

**(8) நிந்தை உவனம்**

ஒரு பொருளுக்குக் கூறப்படும் உவமப்பொருளைப் பழித்துச் சொல்வது நிந்தை உவமை.

**(9) நியம உவமை**

இந்தப் பொருளுக்கு இந்தப் பொருளே உவமை என்று உறுதிப்பட கூறுவது.

**(10) அநியம உவமை**

இந்தப் பொருளுக்கு இந்தப் பொருளோகா என்று உறுதிப்பட கூறுவது.

**(11) ஐய உவமை**

பொருளையும் உவமையையும் உறுதியாக கூறாமல் இதுவோ? அதுவோ? என ஐயப்பாடு தோன்ற உரைப்பது.

**(12) தெரிதருதேற்ற உவமை**

உவமையைக் கூறிப் பின் ஐயுற்ற நிலையில் இருந்து மாறிச்சில காரணங்களைக் கொண்டு இதுவே எனத் துணிந்து தெளிவது.ஒரு பொருளுக்கு அதனினும் சிறந்த ஒன்றை முதலில் உவமையாக்கிக் காட்ட வேண்டும்.

**(13) இன்சொல் உவமை**

சிறப்பு, பொருளுக்கு ஒப்பாகுமே அன்றி உயர்வாகாது எனச் சமப்படுத்திக் கூறுவது.

**(14) விபரீத உவமை**

உவமையாக வருவனவற்றைப் பொருளாகவும் பொருளாக வருவனவற்றை உவமையாகவும் மாற்றி உரைப்பது.

**(15) இயம்புதல் வேட்கை உவமை**

உபமேயமாகிய ஒரு பொருளை இன்ன பொருள் போல இருக்கிறதென்று சொல்ல விரும்புகின்றது என் உள்ளம் எனக் கூறுவது.

**(16)பலபொருள் உவமை**

ஒரு பொருளுக்குப் பல பொருள்களை உவமையாகக் காட்டுவர்.

**(17)விகார உவமை**

ஒரு பொருளுக்கு ஒப்புமையாகக் கூறப்படும் உவமையிலிருந்து ஒன்றைப் பிரித்துக் கூறுவது.

**(18) மோக உவமை**

ஒரு பொருளின் மேல் எழுந்த ஆசை மிகுதியினால் வந்த மனமயக்கம் தோன்ற உரைப்பது.

**(19) அபூத உவமை**

முன் இல்லாத ஒன்றை உவமையாக்கி உரைப்பது.

**20) பலவயிற்போலி உவமை**

பல இடங்களிலும் போல என்னும் சொல்லைப் பெற்று நிற்றல்.

**(21) ஒருவயிற் போலி உவமை**

ஓர் இடத்து மட்டும் உவமை சொல் தோன்றும்படி அமைவது.

**(22) கூடா உவமை**

ஒரு பொருளுக்குப் பொருந்தாத தன்மை ஒன்றனைப் பொருந்துவதாகக் கொண்டு அதனை ஒன்றற்கு உவமையாக்கி உரைப்பது.

**(23) பொது நீங்கு உமை**

ஒன்றற்குக் கூறப்பட்ட உவமையை மறுத்துப் பின் அப்பொருள் தானே தனக்கு நிகராகும் என்று மேம்பாடு தோன்றக் கூறுவது.

**(24) மாலை உவமை**

ஒரு பொருளுக்குப் பல உவமை அமையும் அவற்றை ஒன்றன் பின் ஒன்றாக இடைவிடாது தொடர்ச்சி உடையனவாகச் சேர்த்து இறுதிக்கண் பொருள் கூட்டி முடிப்பது.

**உருவகவணி**

கவிஞன் தான் ஒரு பொருளைச் சிறப்பிக்க எண்ணுவான் அப்பொருளை உவமை ஆகும் வேறொரு பொருளோடு ஒன்றுபடுத்திக் கூறுவான். உவமையின் தன்மையைப் பொருள்மேல் ஏற்றிக் கூறும் இத்தன்மையே உருவகம் எனக் கூறப்படும். உபமானம், உபமேயம் என்னும் இரண்டுக்கும் வேற்றுமை இல்லாமல் இரண்டும் ஒன்றே என்பது தோன்றக் கூறுவது உருவக அணி.

**உருவக அணியின் இலக்கணம்**

**"உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து**

**ஒன்று என மாட்டின் அஃது உருவகம் ஆகும்."**

உவமையாகும் பொருள் [உபமானம்] உவமிக்கப்படும் பொருள் [உபமேயம்] எனப் பொருள் இருவகைப்படும். அவ்விரண்டுக்குள் வேறுபாடு காணமுடியாத வகையில் ஒன்றென்னும் படி ஒற்றுமைப்படுத்தி கூறுவது உருவகம் என்னும் அணியாகும்.

**உருவக அணியின் வகைகள்**

தொகை உருவகம் முதல் அவயவி உருவகம் வரை 15 வகைகளாம்.

**1) தொகை உருவகம்**

'ஆகிய' என்னும் தொடர்பை உண்டாக்கும் சொல் மறைந்து வருதல்.

[எ.கா] அங்கை மலர் (அங்கையாகிய மலர்)

**2) விரி உருவகம்**

ஆகிய என்னும் சொல் வெளிப்பட்டு நிற்பது.

**3) தொகைவிரி உருவகம்**

ஆக, ஆகிய என்னும் சொற்கள் மறைந்தும் வெளிப்பட்டும் வருதல்.

**4) இயைபு உருவகம்**

பல பொருளை உருவகம் செய்யும் பொழுது ஒன்றோடொன்று இயைபுடைய பொருளை ஒரு தொடரில் உருவகமாக வரத் தொடுப்பது.

**5) இயைபிலி உருவகம்**

ஒன்றற்கு ஒன்று பொருத்தமில்லாத ஒன்றை உருவகப்படுத்திக் கூறுவது.

**6) வியநிலை உருவகம்**

பல உறுப்புக்களை உடைய ஒரு பொருளில் சிலவற்றை உருவகம் செய்தும் சிலவற்றை உருவகம் செய்யாமல் விடுவது.

**7) சிறப்பு உருவகம்**

ஒரு பொருளின் சிறந்த அடைகளை உருவகப்படுத்தி அதன் பொருளை உருவகமாக்குதல்.

**8) விரூபக உருவகம்**

ஒரு பொருளுக்கு கூடாத தன்மை பலவும் கூட்டி உருவகம் செய்வது.

**9)சமாதான உருவகம்**

ஒரு பொருளை நன்மை தருவதாக உருவகித்து பின் அது நீங்கு தரும் என கூற வேண்டும். அதற்கான தீங்கு அப்பொருளால் தோன்றியது அல்ல வேறொரு பொருளால் என காரணம் கூறுதல்.

**10) உருவக உருவகம்**

உருவகித்த பொருளை வேறு ஒன்றாக உருவகிக்க வேண்டும்.

**11) ஏகாங்க உருவகம்**

ஒரு பொருளுக்கு அமைந்த உறுப்புக்கள் பலவற்றுள் ஒன்றை மட்டும் உருவகம் செய்வது.

**12) அநேகாங்க உருவகம்**

ஒரு பொருளுக்கு அமைந்த பல உறுப்புகளை உருவகம் செய்வது.

**13) முற்று உருவகம்**

பல உறுப்புகளை உடைய பொருள்களையும்அதன் உறுப்புக்களையும் ஏற்ற இடத்தொடும் பிறவற்றோடும் முழுமையாக உருவகம் செய்வது.

**14) அவயவ உருவகம்**

ஒரு பொருளுக்கு அமைந்த பல உறுப்புக்களை பல உறுப்புக்களை உடைய பொருளையும் உருப்புக்களை உடைய பொருளை உருவகம் செய்யாமல் உருப்புக்களை மட்டும் உருவகம் செய்வது.

**15) அவயவி உருவகம்**

அவயவியாகிய பொருளை உருவகம் செய்து அதன் உறுப்புக்களை உருவகிக்காமல் விட்டுவிடுதல்.

## அலகு - 1

### வினாக்கள்

**இரண்டு மதிப்பெண் வினாக்கள்**

1. இலக்கணம் வகை எத்தனை?
2. தண்டியலங்காரத்தின் ஆசிரியர் பெயர் என்ன? காலம்?
3. தண்டி நூலமைப்பு குறித்து எழுதுக.
4. பொது வணியியல் என்றால் என்ன?
5. பொருளணியியல் என்றால் என்ன?
6. சொல்லணியியல் என்றால் என்ன?
7. தன்மையணி குறித்து எழுதுக
8. உவமையணி குறித்து எழுதுக.
9. உருவகம் என்றால் என்ன?
10. உவமையணியின் இலக்கணம் எழுதுக.

**ஐந்து மதிப்பெண் வினாக்கள்**

1. பொருளணிகளின் வகைகள் குறித்து விளக்குக

2.தன்மையணியின் வகைகள் குறித்து விளக்குக.

3.உவமையணியின் பொது இலக்கணம் எழுதி விளக்குக.

4.உருவகவணியின் வகைகள் குறித்து விளக்குக.

**10 மதிப்பெண் வினாக்கள்**

1.தன்மையணி பற்றி விவரித்து எழுதுக.

2. உவமையணி பற்றி விவரித்து எழுதுக.

3.உருவகவணியின் வகைகள் குறித்து விவரித்து எழுதுக.

## அலகு 2

**தீவகம்,வேற்றுப்பொருள் வைப்பணி,ஒட்டணி ,தற்குறிப்பு**

**தீவக அணி**

தீவகம் என்னும் வடசொல்லுக்கு விலக்கு என்பது பொருளாகும்.ஓர் இடத்தில் வைக்கப்பட்ட விளக்கு பல இடங்களிலும் உள்ள பொருளை விளங்க காற்றும் அதுபோல ஓரத்தில் நின்ற சொல் பல இடங்களிலும் சென்று பொருளை விளக்குவது தீவக அணி ஆகும். இதற்கு விலக்கு அணி என்னும் வேறு பெயரும் உண்டு இதனை வடநூலார் 'தீப அலங்காரம்' என்பார்.

**தீவக அணியின் இலக்கணம்**

**"குணம் தொழில் சாதி பொருள் குறித்த ஒரு சொல்**
**ஒருவயின் நின்றும், பலவயின் பொருள்தரின்**
**தீவகம் செய்யுள் மூவிடத்து இயலும்"**

குணம்,தொழில், சாதி, பொருள் ஆகிய நான்கும் ஏதேனும் ஒன்றைக் குறிக்கும் ஒரு சொல் ஓர் இடத்தில் நிற்கும். அச்சொல் செய்யுளில் பல இடத்தில் நின்ற சொற்களோடு பொருந்திப் பொருள் வைப்பது தீவக அணி ஆகும். அது செய்யுளின் மூவிடத்தும் வெளிப்பட்டுத் தோன்றும்.

**1. முதல் நிலைத் தீவகம்**

**2.இடை நிலைத் தீவகம்**

**3.கடை நிலைத் தீவகம்**

**1.முதல் நிலைத் தீவகம்**

முதல்நிலை குண தீவகம்

முதல்நிலை சாதி தீவகம்

முதல்நிலைப் பொருள் தீவகம்

**2.இடை நிலைத் தீவகம்**

இடைநிலை குண தீவகம்

இடைநிலை தொழில் தீவகம்

இடைநிலை சாதி தீவகம்

இடைநிலை பொருள் தீவகம்

**3.கடை நிலைத் தீவகம்**

கடைநிலை குணத் தீவகம்

கடைநிலைத் தொழில் தீவகம்

கடைநிலைப் பொருள் தீவகம்

**வேற்றுப்பொருள் வைப்பணி**

கவிஞன் ஒரு பொருளை சிறப்பிக்க கருதுவான். அதற்கு உலகம் அறிந்த வலிமை உடைய வேறொரு பொருளை எடுத்துக்காட்டி முடிப்பான்.அதுவே வேற்றுப்பொருள் வைப்பணி ஆகும். வீரசோழியம் அணியை பிறப்பு என கூறுகின்றது. இதனை வடநூலார் 'அர்த்தாந்தர நியாசம்' என்பர்.

வேற்றுப்பொருள் வைப்பணியின் இலக்கணம்

**"முன்ஒன்று தொடங்கி மற்றது முடித்தற்குப்**

**பின்ஒரு பொருளை உலகுஅறி பெற்றி**

**ஏற்றிவைத்து உரைப்பது வேற்றுப்பொருள் வைப்பே"**

ஒரு சிறப்பு பொருளை உறுதிப்படுத்தி முடித்தற்கு பொது பொருளை கூறுவர். பொதுப் பொருளை உறுதிப்படுத்திக் கூற சிறப்புப் பொருளைக் கூறுவதும் உண்டு. ஆயினும் அப்பொருள்கள் உலகம் அறிந்த பொருள்களாக இருக்க வேண்டும்.

**வேற்றுப்பொருள் வைப்பணியின் வகைகள்**

வேற்றுப்பொருள் வைப்பணி எட்டு வகைப்படும்.

**1.முழுவதும் சேறல்**

ஒரு பொருளுக்கு கூறிய இந்த உலகில் உள்ள அனைத்து பொருளுக்கும் பொருள் பொருந்தும் வண்ணம் உரைப்பது ஆகும்.

**2.ஒருவழிச்சேறல்**

கூறப்பட்ட இயல்பு சில பொருள்களுக்கு மட்டும் பொருந்தி வருவது ஒருவழிச் சேறல்.

**3.முரணித் தோன்றல்**

தம்முள் மாறுபட்டு இருக்கும் தன்மை உடைய பொருளை கூறுதல்.

**4.சிலேடையின் முடித்தல்**

முன்வைத்த பொருளையும் பின் உள்ள பொருளையும் இரு பொருள்பட கூறுதல்.

**5.கூடா இயற்கை**

குறும்பா இயல்புடைய ஒன்றைப் பொருந்தித் கூறல்.

**6.கூடும் இயற்கை**

பொருந்தும் இயல்புடைய ஒன்றை அதற்கேற்ப எடுத்து உரைத்தல்.

**7.இருமை இயற்கை**

பொருந்தும் நன்மை, பொருந்தா நன்மை இரண்டையும் உரைத்தல்.

**8.விபரீதப்படுத்தல்**

இயற்கைக்கு மாறாய் நடந்ததை விவரித்தல்.

**ஒட்டணி**

கவிஞன் தான் கூறக் கருதிய ஒன்றை நேரே கூறாமல் விடுத்து, அதனை ஒப்புமை உடைய பொருளோடு ஒட்டி கூறுவான்.அதன் வாயிலாக சொல்ல கருதியதைக் குறிப்பாக உணர்த்துவான்.ஒட்டிக் கூறுவதால் ஒட்டணி என்பது காரணப் பெயராயிற்று.

**வேறு பெயர்கள்**

பிறிது மொழிதல்,நுவலா நுவற்சி உள்ளுறை, உவமைப்போலி.

**ஒட்டணியின் இலக்கணம்**

**"கருதிய பொருள்தொகுத்து அது புலப்படுத்தற்கு**
**ஒத்தது ஒன்று உரைப்பின் அஃது ஒட்டு என மொழிப"**

புலவன் தன்னால் கருதப்பட்ட பொருளை மறைத்து அதனை வெளிப்படுத்துவதற்குத் தகுதி உடைய பிறிதொன்றை சொல்லின் அது ஒட்டு என்னும் அணியாகும்.

**ஒட்டணியின் வகைகள்**

**“அதுவே, மற்றஅடையும் பொருளும் அயல்பட மொழிதலும்**
**அடைபொது ஆக்கி ஆங்ஙனம் மொழிதலும்**
**விரவத் தொடுத்தலும் விபரீதப் படுத்தலும்**
**எனநால் வகையினும் இயலும் என்ப”**

மேற்சொல்லப்பட்ட ஒட்டணியானது 1. கூறுகின்ற பொருளும் அதனது அடையும் வேறுபட மொழிதல் 2. அடை பொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழிதல் 3. அடை விரவிப் பொருள் வேறுபட மொழிதல் 4. அடையைத் திரிபுபடுத்திப் பொருள் வேறு படமொழிதல் என நான்கு வகைப்படும்.

**தற்குறிப்பேற்றவணி**

இயல்பாக நிகழும் நிகழ்ச்சி ஒன்றின் மேல் கவிஞன் தான் கூறக் கருதிய பொருளை ஏற்றி சுவைபட உரைப்பது தற்குறிப்பேற்ற அணி.ஒன்றை வேறொன்றாக சிறப்பித்துச் சொல்லுவதே இவ்வணி ஆகும்.அணிகளில் சிறந்ததாக கருதப்படும் இவ்வணியைக் கவிஞன் உடன்பாடும் எதிர்மறைக்கும் பயன்படுத்துவான். பல இலக்கியங்களில் கவிஞனின் கற்பனை ஆற்றலையும் சிந்திக்கும் திறனையும் அறிவதற்கு இது ஒரு கருவியாக அமைகிறது. இதற்கு நோக்கணி,தற்குறிப்பணி என்னும் வேறு பெயர் உண்டு.

**தற்குறிப்பேற்ற அணியின் இலக்கணம்**

**"பெயர்பொருள் அல்பொருள் எனஇரு பொருளினும்**

**இயல்பின் விளைதிறன் அன்றி அயல்ஒன்று**

**தாள்குறித்து ஏற்றுதல் தற்குறிப் பேற்றம்"**

1. இயங்கு பொருள் 2. இயங்காப் பொருள் என இருவகைப்படும். இயல்பாக நிகழும் நிகழ்ச்சிகள் உள்ளன. ஒரு அவ்இருபொருள்களுக்கும் பொருளின் இயல்புத் தன்மையை விடுத்துக் கவிஞன் தான் கருதிய வெறொன்றனை அவற்றின் மீது ஏற்றிச் சொல்லுவதே தற்குறிப்பேற்றம் என்னும் அணியாகும். தன் குறிப்பை ஏற்றிக் கூறுவதால் தற்குறிப்பேற்றம் ஆயிற்று. குறிப்பு என்பது ஈண்டுக் கருத்து எனப் பொருள்படும்.

**1. பெயர் பொருள் தற்குறிப்பேற்றம்**

இயங்குகின்ற பொருளில் இயல்பாக நடக்கும் நிகழ்ச்சி மீது தன் கருத்தை ஏற்றிக் கூறுவது பெயர் பொருள் தற்குறிப்பேற்றம் ஆகும்.

முனைவர் கு.சங்கீதா.,MA.,B.Ed.,Ph.D.,
தமிழ்த்துறை,உதவிப் பேராசிரியர்
அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி - **கரூர்.**

**2. பெயராப் பொருள் தற்குறிப்பேற்றம்**

இயங்காத பொருளில் இயல்பாக நடக்கும் நிகழ்ச்சி மீது தன் கருத்தை ஏற்றிக் கூறுவது பெயராப் பொருள் தற்குறிப்பேற்றம் ஆகும்.

**இரண்டு மதிப்பெண் வினாக்கள்**

1.தீவகம் என்றால் என்ன?

2. தீவக அணியின் இலக்கணத்தை எழுதுக.

3. முதல் நிலைத் தீவகம் என்பது என்ன?

4. இடைநிலைத் தீவகம் என்றால் என்ன?

5. கடைநிலைத் குணத்தீவகம் என்பதனை எழுதுக.

6. பின்வருநிலையணி என்றால் என்ன?

7.பின்வருநிலையணி இலக்கணம் குறித்து எழுதுக.

8.சொற் பின்வரு நிலை என்றால் என்ன?

9. வேற்றுப்பொருள் வைப்பணி என்றால் என்ன?

10.வேற்றுப்பொருள் வைப்பணி இலக்கணம் குறித்து எழுதுக.

11.வேற்றுப்பொருள் வைப்பு அணியின் வகைகள் எத்தனை?

12.கூடும் இயற்கை, கூட இயற்கை என்பதை வேறுபடுத்திக் காட்டுக.

13. விபரீதப்படுத்தல் என்றால் என்ன?

14. வேற்றுமையணி என்றால் என்ன?

15.வேற்றுமை அணியின் இலக்கணம் குறித்து எழுதுக.

16.ஒரு பொருள் வேற்றுமை சமம் என்றால் என்ன?

17. வேற்றுமை அணியின் வகைகள் எத்தனை?அவை யாவை?

18. தொழில் வேற்றுமை என்றால் என்ன?

19. ஒட்டணி என்றால் என்ன?

20.ஒட்டணியின் இலக்கணம் குறித்து எழுதுக.

21.ஒட்டணியின் வகைகள் குறித்து எழுதுக.

22. தற்குறிப்பேற்ற அணி என்றால் என்ன?

23.தற்குறிப்பேற்ற அணியின் இலக்கணம் குறித்து எழுதுக.

24.பெயர் பொருள் தற்குறிப்பேற்றம் என்றால் என்ன?

25.பெயராப் பொருள் தற்குறிப்பு தற்குறிப்பேற்றம் என்றால் என்ன?

**ஐந்து மதிப்பெண் வினாக்கள்**

1.தற்குறிப்பேற்றவணி குறித்து விளக்கி எழுதுக.

2. ஒட்ட அணியின் வகைகள் குறித்து விளக்கி எழுதுக.

3. வேற்றுமை அணி குறித்து விளக்கி எழுதுக.

4.வேற்றுப்பொருள் வைப்பணி குறித்து எழுதுக.

5. வேற்றுப்பொருள் வைப்பணி வகைகளை விளக்கி எழுதுக

6. தீவக அணியை விளக்கி எழுதுக.

**பத்து மதிப்பெண் வினாக்கள்**

1. தீவக அணியியை விவரித்து எழுதுக.

2. வேற்றுப்பொருள் வைப்பணியை விவரித்து எழுதுக.

3. ஒட்டணியை விவரித்து எழுதுக.

4.தற்குறிப்பேற்ற அணியை விவரித்து எழுதுக.

## அலகு 3

ஏது-நுட்பம்- இலேசம்-நிரல்நிறையணி-சுவையணி

**ஏதுஅணியின் இலக்கணம்**

**"யாதன் திறத்தினும் இதனின்இது விளைந்தது என்று**

**ஏதுவிதந்து உரைப்பது ஏது; அதுதான்**

**காரகம் ஞாபகம் எனஇரு திறப்படும்"**

ஏதேனும் ஒரு பொருள் திறத்து அதனால் இது நிகழ்ந்தது என்று காரணத்தைச் சிறப்பித்துச் சொல்லுவது ஏது என்னும் அணியாகும். அது 1. காரக ஏது 2. ஞாபக ஏது என்னும் இரண்டு வகைப்படும்.

**காரக ஏதுவின் வகைகள்**

**“முதல்வனும் பொருளும் கருமமும் கருவியும்**

**ஏற்பது நீக்கமும் எனஇவை காரகம்”**

1.கருத்தா (முதல்வன்) 2. பொருள் 3. கருமம் 4. கருவி 5. ஏற்பது6.நீக்கம் என்னும் இவ்ஆறன் காரணமாகத் தோன்றுவது காரக ஏதுவாகும்.

**1.,கருத்தா காரக ஏது**

கருத்தாவின் செயலைப் பிற தோன்றுவதற்குக் காரணமாகவும் காட்டுவது கருத்தா காரக ஏதுவாகும்.

**2. பொருட்காரக ஏது**

பொருட்களின் செயலினை ஏதுவாக்கிக் காட்டுவது பொருட்காரக ஏது ஆகும்.

**3.கரும காரக ஏது**

ஒரு செயற்பாட்டினை கருவியாகவும் காரணமாகவும் காட்டுவது கரும காரக ஏது

**4.கருவி காரக எது**

கருவியாகிய துணை காரணத்தின் செயலினை ஏதுவாக்கிக் காட்டுவது கருவி காரக ஏது.

**நுட்பவணி**

பிறருடைய கருத்தை அறிந்து, அதற்குரிய மறுமொழியைச் சொல்லால் வெளிப்படுத்தாமல் குறிப்பாலோ செயலாலோ அரிதாக உய்த்துணரும்படி புலப்படுத்துவது நுட்ப அணியாகும். இதற்கு நுணுக்கம், பரிகரணம் என்னும் வேறு பெயர்களும் உண்டு. வடநூலார் இதனைச் 'சூக்கும அலங்காரம்' என உரைப்பர்.

**நுட்ப அணியின் இலக்கணம்**

“தெரிபு வேறு கிளவாது குறிப்பினும் தொழிலினும்

அரிதுஉணர் வினைத்திறம் நுட்பம் ஆகும்”

1.குறிப்பினாலாவது 2. தொழிலினாலாவது அரிதாக நோக்கி உணரும் தன்மையை உடையது நுட்பம் என்னும் அணியாகும்.எளிதில் அறிதற்கு அருமை உடையது பற்றி நுட்பம் எனப் பெயர்பெற்றது. குறிப்பு என்பது மனத்துள் கருதிய ஒன்றை உடல் இயக்கங்களால் (அங்க அசைவுகளால்) அறிவிப்பதாகும்.

**1. குறிப்பு நுட்பம்**

குறிப்பால் நுட்பமாக உணர்ந்து கொள்ளச் செய்வது குறிப்பு நுட்பமாகும்.

**2. தொழில்நுட்பம்**

தொழிலால் நுட்பமாக உணர்ந்து கொள்ள செய்வது தொழில் நுட்பமாகும்.

**இலேசவணி**

ஒருவர் தன்னிடத்தில் வெளிப்படும் மெய்ப்பாட்டுணர்விற்கு உரிய மெய்யான காரணத்தை மறைத்து அது வேறொன்றால் நிகழ்ந்ததாகக் கூறுவது இலேச அணி எனப்படும். (இலேசம் - கனம் இன்மை; அற்பம்)

**இலேச அணியின்** இலக்கணம்

"குறிப்பு வெளிப்படுக்கும் சத்துவம் பிறிதின்
மறைத்துஉரை யாடல் இலேசம் ஆகும்"

உள்ளம் கருதியதனை வெளிப்படுத்தும் சத்துவமாகிய குணங்களைப் பிறிதொன்றால் நிகழ்ந்ததாக மறைத்துச் சொல்லுவது இலேசம் என்னும் அணியாகும்.

**இலேச அணியின் வகைகள்**

**"புகழ்வது போலப் பழித்திறம் புனைதலும்**
**பழிப்பது போலப் புகழ்புலப் படுத்தலும்**
**அவையும் அன்னதுஎன்று அறைகுநர் உளரே"**

1. ஒன்றனைப் புகழ்வது போலப் பழித்து உரைத்தல்

2. பழிப்பது போலப் புகழ்ந்து உரைத்தல் என்பனவும் முற்கூறிய இலேச அணி ஆகுமென்று சொல்லுவாரும் உளர்.

**1. புகழ்வது போலப் பழித்தல்**

ஒன்றனைப் புகழ்வது போலப் பழித்துக் கூறுதலே புகழ்வது போலப் பழித்தல் ஆகும்.

**2. பழிப்பது போலப் புகழ்தல்**

ஒன்றனைப் பழிப்பது போலப் புகழ்ந்து கூறுதல்

**நிரல்நிறையணி**

கவிஞர் தம் செய்யுட்களில் முதலில் சொற்பொருட்களை வரிசைப்படுத்துவர். அவற்றோடு தொடர்புடையவற்றைப் பின்னர் அதே முறையில் பொருள்படுமாறு வரிசைப்படுத்திப் பாடுவர். இவ்வாறு அமைப்பதே நிரல்நிறை என்னும் அணியாகும். இதற்கு அடைவணி என்னும் வேறு பெயரும் உண்டு. வடநூலார் இவ்அணியை 'யதாசங்கி அலங்காரம்' எனக்கூறுவர். (திரல் - வரிசை; நிறை - நிறுத்துதல்)

**நிரல்நிறை அணியின் இலக்கணம்**

**" நிரல்நிறுத்து இயற்றுதல் நிரல்நிறை அணியே"**

சொல்லையும் பொருளையும் நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வது நிரல்நிறை என்னும் அணியாகும். நிரல் நிறுத்துதல் என்று கூறாமல் இயற்றுதல் எனக் கூறப்பட்டதால் இது மொழிமாற்றியும் கொள்ளப்படும்.

**1.முறை நிரல்நிறை**

எழுவாயாய் அமைந்த பொருள்களையும் அவற்றிற்கு உரிய பயனிலைகளையும் கிடந்த முறையிலே இயைத்துப் பொருள் காண்பது

முறை நிரல்நிறை அணியாகும். இதனை நிரலே நிறுத்தி நேரே பொருள்கொள்வது என்றும் கூறுவர்.

**2. மொழிமாற்று நிரல்நிறை**

நிரலே கிடந்த எழுவாய்க்கேற்பப் பயனிலைகளை மாற்றிப் பொருள் பொருந்துமாறு இயைத்துக் காண்பது மொழிமாற்று நிரல்நிறை ஆகும். இதனை நிரலே நிறுத்தி மொழிமாற்றிப் பொருள் கொள்வது

என்றும் குறிப்பர்.

**சுவையணி**

உள்ளத்தின்கண் திகழும் தன்மைகளைப் பிறர் அறியும் வகையில் உடலால் புலப்படுத்திக் காட்டுவதே மெய்ப்பாடாகும். அவை நகை,அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி என்பன இவை எட்டும் சுவை என்றும் கூறப்படும். இச்சுவையினை விளக்குவதே சுவையணி ஆகும். சுவையை வடமொழியில் இரசவத் (இரசம்) என்று கூறுவர். இவ்எட்டோடு நடுவுநிலை என்னும் சமநிலையைக் கூட்டிச் சுவை ஒன்பது என்பது வடநூல் கொள்கை. சமநிலையைச் சுவையாகத் தமிழர் ஏற்பதில்லை. வடநூலார் மெய்ப்பாட்டினைப் 'பாவம்' எனக் கூறுவர்.காப்பியங்களிலும் நாடகங்களிலும் இச்சுவை வெளிப்பாடு பேராட்சி செலுத்துகிறது.

**சுவைஅணியின் இலக்கணம்**

**“உள்நிகழ் தன்மை புறத்துத் தோன்ற**
**எண்வகை மெய்ப்பாட்டின் இயல்வது சுவையே”**

உள்ளே நிகழ்ந்த தன்மை புறத்துப் புலனாய் விளங்கும்படியாக எட்டுவகைப்பட்ட மெய்ப்பாட்டினாலும் நடப்பது சுவை என்னும் அணியாகும்.

**சுவை அணியின் வகைகள்**

**"அவைதாம்,**

**வீரம் அச்சம் இழிப்பொடு வியப்பே**

**காமம் அவலம் உருத்திரம் நகையே"**

1. வீரம் 2. அச்சம் 3. இழிப்பு 4. வியப்பு 5. காமம் 6. அவலம் 7. உருத்திரம் 8. நகை என்பனவாம்.

**1. வீரச்சுவை**

வீரம் காரணமாகத் தோன்றும் சுவையே வீரச் சுவையாகும். இது மனத்துணிவினால் புலப்படுவதாகும். தொல்காப்பியர் பெருமிதம் பிறக்கும் அடிப்படைகளுள் ஒன்றாக இதனைக் காட்டுகிறார். எனவே இது பெருமிதமாகக் கொள்ளப் பெறுகிறது. கல்வி, தறுகண், இசைமை, கொடை ஆகிய நான்கும் பற்றிப் பெருமிதம் பிறக்கும். அவற்றுள் ஒன்றாகிய தறுகண் என்பது வீரத்தைக் குறிப்பதாகும். வடமொழி மரபு பற்றி இந்நூலாசிரியர் இதனைத் தனியே சுவையாக்கிக் காட்டுகிறார்.

**2. அச்சச்சுவை**

**அச்சம் காரணமாகத் தோன்றும் சுவையே.**

அணங்கு,விலங்கு, கள்வர்,இறை

**3. இழிப்புச் சுவை**

**இழிப்புக் காரணமாகத் தோன்றும் சுவையே.**

மூப்பு,பிணி,வருத்தம், மென்மை

**4.வியப்புச் சுவை**

**மன எழுச்சி காரணமாகத் தோன்றும் சுவையே**

புதுமை,பெருமை,சிறுமை,ஆக்கம்

**5. காமச் சுவை**

**காமம் காரணமாக தோன்றும் சுவை.**

செல்வம்,புலன், புணர்வு, விளையாட்டு

**6. அவலச்சுவை**

**அவலம் காரணமாகத் தோன்றும் சுவை அவலச்சுவை.**

இழிவு,இழவு, அசைவு, வறுமை

**7.உருத்திரச் சுவை**

**சினத்தின் காரணமாகத் தோன்றும் சுவை**

உறுப்புறை,குடிகோள், அலை,கொலை

**8. நகைச்சுவை**

**நகை காரணமாகத் தோன்றும் சுவை**

எள்ளல், இளமை, பேதைமை, மடம்

## அலகு 3

**இரண்டு மதிப்பெண் வினாக்கள்**

1. ஏதுவணி என்றால் என்ன?

2.ஏது அணியின் இலக்கணம் குறித்து எழுதுக.

3. நுட்பவணி என்றால் என்ன?

4. நுட்பவணியின் இலக்கணம் குறித்து எழுதுக.

5.இலேசவணி என்றால் என்ன?

6.இலேசவணி இலக்கணம் குறித்து எழுதுக.

7. நிரல்நிறை அணி என்றால் என்ன?

8.நிரல்நிறை அணியின் இலக்கணம் குறித்து எழுதுக.

9. முறை நிரல் நிறை என்பது என்ன?

10. மொழிமாற்று நிரல்நிறை என்பது என்ன?

11. சுவையணி என்றால் என்ன?

12. சுவை அணியின் இலக்கணம் குறித்து எழுதுக.

13. சுவை அணியின் வகைகள் எத்தனை வகைப்படும் ?அவை யாவை?

**ஐந்து மதிப்பெண் வினாக்கள்**

1. ஏது அணியினை விளக்கி எழுதுக.
2. நுட்ப அணியின் இலக்கணம் குறித்து விளக்கி எழுதுக.
3. இலேசவணியின் வகைகளை விளக்கி எழுதுக.
4. நிரல்நிறை அணி பற்றி விளக்கி எழுதுக.
5. சுவை அணியினை வகைகள் குறித்து விளக்கி எழுதுக.

**பத்து மதிப்பெண் வினாக்கள்**

1. ஏது பணியினை விவரித்து எழுதுக.
2. நுட்ப அணி இனி விவரித்து எழுதுக
3. இலேசவணியை விவரித்து எழுதுக.
4. நிரல்நிறை அணி குறித்து விவரித்து எழுதுக.
5. சுவையணி குறித்து விவரித்து எழுதுக.

## அலகு - 4

தன் மேம்பாட்டுரை - பரியாயம் - சிலேடை-அவநுதி

**தன்மேம்பாட்டுரையணி**

ஒருவனுடைய ஆற்றலைப் பிறர் அறியார். அவ்இடங்களில் தன்னுடைய ஆற்றலைத் தானே எடுத்துக் கூறுவர். இவ்வாறு எடுத்துமொழிவதே

தன்மேம்பாட்டுரை என்னும் அணியாகும். தன்னைத் தானே புகழ்ந்து கூறுதல் குற்றமாயினும் சில இடங்களில் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஊக்கத்தை ஏற்படுத்துவதால் இதனை 'ஊக்கஅணி' எனவும் கூறுவர்.புறத்துறையைச் சார்ந்த 'நெடுமொழி கூறல்', 'நெடுமொழி வஞ்சி'ஆகியவை தன்மேம்பாட்டுரை வகையைச் சார்ந்தனவாம். இதனைவடநூலார் 'ஊர்ஜச்சுவி'கூறுவர்.

**தன்மேம்பாட்டுரை அணியின் இலக்கணம்**

**"தான்தன் புகழ்வது தன்மேம் பாட்டு உரை"**

ஒருவன் தன்னைத் தானே புகழ்ந்து சொல்லுவது தன்மேம்பாட்டுரை அணி ஆகும்.

**எஞ்சினார் இல்லை எனக்கு எதிரா இன்னுயிர்கொண்டு**

**அஞ்சினார் அஞ்சாது போய்அகல்க - வெஞ்சமத்துப்**

**பேராது அவர்ஆகத்து அன்றிப் பிறர்முதுகில்**

**சாராஎன் கையில் சரம்.**

கொடிய போரில் எனக்கு எதிராக வந்து போர்செய்து தமது இனிய உயிரைக் காப்பாற்றிக் கொண்டு பிழைத்தவர் எவருமிலர். எனக்கு அஞ்சியவர்கள் அஞ்சாமல் விலகிச் செல்வீராக! என் கைகளால் செலுத்தப் பெறும் அம்பு, எதிர்நின்று போர் செய்யும் வீரர்களின் மார்பின் கண்ணே தைக்கும். அதுவன்றிப் புறம் கொடுத்து ஓடுபவர்களின் முதுகைக் குத்தாது.

இப்பாடலில் எனக்கு எதிராக வந்தோர் எவரும் உயிரோடு செல்ல முடியாது என்பதும் என் அம்பு முதுகில் பாயாது என்பதும் ஒருவன் தன்னைத் தானே புகழ்ந்து கொள்வதாய் அமைந்துள்ளன.

**பரியாயவணி**

கவிஞன் தான் கூறக் கருதிய ஒன்றனை அவ்விடத்துக் கூறுதல் தகாது எனக் கருதிப் பிறிதொன்றால் அப்பொருளை விளக்குவது பரியாய அணி ஆகும். இதனைப் 'பிறிதின் நவிற்சி' எனவும் கூறுவர். வடநூலார் இதனைப் 'பரியாயோக்தம்' என்பர். பரியாயம் என்பதற்குச் சாமர்த்தியமாக அறிவிக்கும் வார்த்தை என்பது பொருளாகும்.

**பரியாய அணியின் இலக்கணம்**

**“கருதியது கிளவாது அப்பொருள் தோன்றப்**
**பிறிது ஒன்று உரைப்பது பரியா யம்மே”**

தான் எண்ணியதனைக் கூறாது அப்பொருள் தோன்றப் பிறிதொன்றனைக் கூறுவது பரியாயம் என்னும் அணியாகும்.

**அவநுதியணி**

யாதானும் ஒரு பொருளின் உண்மைத் தன்மையை மறுத்துப் பிறிதொரு தன்மையை அதன்கண் ஏற்றி உரைப்பது அவநுதி அணியாகும். அவ்உண்மைத்தன்மை சிறப்பாலும் பொருளாலும் குணத்தாலும் அமைவதாகும். இவ்அணிக்கு 'ஒழிப்பணி', 'மறுப்பணி' என்னும் வேறு பெயர்களும் உண்டு. வடநூலார் இதனை ‘அவநுதி அலங்காரம்' என்பர். அவநுதி என்பதற்கு மறுத்துரைத்தல் என்பது பொருளாகும்.

**அவநுதி அணியின் இலக்கணம்**

“சிறப்பினும் பொருளினும் குணத்தினும் உண்மை மறுத்துப் பிறிது
உரைப்பது அவநுதி ஆகும்” 1. சிறப்பினாலும் 2. பொருளினாலும்

3. குணத்தினாலும் ஆகிய உண்மையை மறுத்துப் பிறிதொன்றாக உரைப்பது அவநுதி என்னும் அணியாகும்.

**1.சிறப்பு அவநுதி**

சிறப்புடைய ஒன்றைச் சிறப்பற்றதன்மேல் ஏற்றி உரைப்பது சிறப்பு அவநுதியாகும்.

**2. பொருள் அவநுதி**

ஒரு பொருளின் உண்மைத் தன்மையை மறுத்து அதன்மீது வேறு ஒன்றை ஏற்றி உரைப்பது.

**3. குண அவநுதி**

ஒரு பொருளின் உண்மையான பண்பை மறுத்து அதன்மீது வேறொன்றை ஏற்றி உரைத்தல்

**சிலேடையணி**

செய்யுனில் இடம்பெறும் ஒரு சொல்லோ தொடரோ தனித்து நின்றும் பிரித்து நின்றும் பல பொருள்களைத் தரும். அவ்வாது பொருள் பட அமைவதனைச் சிலேடை அணி என்பர்.சிலேடை என்னும் சொல்லுக்குத் தழுவுதல் உடையது என்பது பொருளாகும். பல பொருள் உடையதாகிய சொற்களை அரிதில் தேர்ந்தெடுத்து அமைக்கும் இவ்அணி நுட்பமும் திட்பமும் உடைய புலவர்களுக்கே இயலுவதாகும். இதனை ‘இரட்டுறமொழிதல் அணி' என்றும் கூறுவர். சிலேஷை என்றும் சமற்கிருதச்சொல் சிலேடை என்னும் வடசொல் ஆயிற்று. இச்சொற்குக் துணைப் பொருள் தருதல் என்பது பொருளாகும்.

**சிலேடை அணியின் இலக்கணம்**

**"ஒருவகைச் சொற்றொடர் பலபொருள் பெற்றி தெரிவு தர வருவது சிலேடை ஆகும்"** ஒரு வகையாய் நின்ற தொடர்ச்சொல் பல பொருள்களது

தன்மை புலப்பட வருவது சிலேடை என்னும் அணியாகும். சிலேடை என்னாது ஆகும் என்றதனால் தொடர்ச்சொல்லே அன்றி ஒரு சொல்லே அவ்வாறு அமையினும் அதுவும் சிலேடை அணியாகவே கொள்ளப்படும்.

**சிலேடை அணியின் வகைகள்**

**"அதுவே,**

**செம்மொழி பிரிமொழி எனஇரு திறப்படும்"**

1. செம்மொழிச் சிலேடை
2. பிரிமொழிச் சிலேடை என இரண்டு வகைப்படும்.

**1. செம்மொழிச் சிலேடை**

பிரிக்கப்படும் தன்மை அற்று நேரே நின்று பலபொருள் தரும் சொற்களால் அமைவது செம்மொழிச் சிலேடை ஆகும்.

"செங்கரங்க ளான்இரவு நீக்கும் திறம்புரிந்து
பங்கய மாதர் நலம்பயிலப் - பொங்குஉதயத்து
ஓர்ஆழி வெய்யோன் உயர்ந்த நெறிஒழுகும்
நீராழி நீள்நிலத்து மேல்"

இப்பாடல் கதிரவனுக்கும் சோழனுக்கும் சிலேடையாய் அமைந்துள்ளது.

1. சிவந்த ஒளிக்கதிர்களால் இருளை நீக்கும் திறன் மிகுந்தது
2. தாமரை விரும்பும் சிறப்புடையது
3. மேல் நோக்கிய தோற்றத்தை உடையது
4. ஒற்றைச் சக்கரத்தால் ஆகிய ஊர்தியை உடையது
5. கடலால் சூழப்பெற்ற இந்நிலவுலகத்தின் மேல் அமைந்த

வானவெளியில் இயங்குவது என்னும் இயல்புகளை உடையது சூரியன்.

**2. பிரிமொழிச் சிலேடை**

ஒரு வகையாய் நின்ற சொல்லையோ தொடரையோ பிரித்து பொருளுக்கு ஏற்ப கொள்ளப்படுவது பிரிமொழிச் சிலேடை.

**சிலேடையின் விரி**

**ஒருவினை பலவினை முரண்விளை நியமம்**

**நியம விலக்கு விரோதம் அவிரோதம்**

**எனஎழு வகையினும் இயலும் என்ப**

1. ஒருவினைச் சிலேடை 2. பலவினைச் சிலேடை 3. முரண்வினைச் சிலேடை 4. நியமச் சிலேடை 5. நியம விலக்குச் சிலேடை 6.விரோதச் சிலேடை 7. அவிரோதச் சிலேடை என்னும் ஏழு கூறுபாட்டான் நடக்கும் என்று சொல்லுவர் புலவர்.

**1.ஒருவினைச் சிலேடை**

ஒரு வினையாய் வருவது ஒருவினைச் சிலேடையாகும்.

**2. பலவினைச் சிலேடை**

பல வினையாய் வருவது பலவினைச் சிலேடை

**3. முரண்வினைச் சிலேடை**

மாறுபட்ட வினையால் வருவது முரண்வினைச் சிலேடை.

**4. நியமச் சிலேடை**

சிலேடை படுத்தப்பட்ட இரு பொருள்களுள் ஒன்றனை வரையறுத்துக் கூறுவது நியமச் சிலேடை.

**5.நியம விலக்குப் சிலேடை**

இரு பொருள்பட எடுத்துக்கொண்ட பொருளை உறுதிபடக் கூறி அதனை விளக்குவதே நியம விலக்குச் சிலேடை.

# அலகு 4

**இரண்டு மதிப்பெண் வினாக்கள்**

1. தன்மேம்பாட்டுரை அணி என்றால் என்ன ?

2.தன்மேம்பாட்டுரை அணியின் இலக்கணம் குறித்து எழுதுக

3.பரியாய அணி என்றால் என்ன?

4.பரியாய அணியின் இலக்கணம் குறித்து எழுதுக.

5. அவநுதியணி என்றால் என்ன?

6. அவநுதியின் இலக்கணம் என்றால் என்ன?

7. பொருள் அவனுதை என்பது என்ன?

8. சிலேடை அணி என்றால் என்ன?

9.சிலேடையணியின் இலக்கணம் குறித்து எழுதுக.

10.சிலேடையணியின் வகைகள் குறித்து எழுதுக.

**ஐந்து மதிப்பெண் வினாக்கள்**

1. தன்மேம்பாட்டுரை அணி குறித்து விளக்கி எழுதுக.

2.பரியாய வணி குறித்து விளக்கி எழுதுக.

3. அவநுதியணி குறித்து விளக்கி எழுதுக.

4. சிலேடை அணி யின் வகைகளை விளக்கி எழுதுக.

**பத்து மதிப்பெண் வினாக்கள்**

1.தன்மேம்பாட்டுரை அணியையும் பரியாய அணியையும் விவரிக்க.

2. சிலேடையணியினை விவரித்து எழுதுக

# அலகு – 5

ஒப்புமை - மாறுபடு புகழ்நிலை-புகழாப்புகழ்ச்சி - வாழ்த்து- பாஷகம்

**ஒப்புமைக்கூட்டவணி**

கவிஞன் நான் கருதிய பொருளைச் சொல்லுமிடத்து அப்பொருளின் குணத்தையிட மிகுந்த குணமுடைய வேறுபொருள்களை ஒருங்கே சொல்லுவான். இதுவே ஒப்புமைக் கூட்டம் என்னும் அணியாகும். பெரிதும் ஒப்புமை உடையவற்றை ஒருங்கே கூட்டிச் சொல்லுவதால் ஒப்புமைக் கூட்டம் என்பது காரணப்பெயர். இதனை 'உடலிலைச் சொல்லணி' என்றும் கூறுவர். வடநூலார் இவ்அணியைத் 'துல்லியயோகிதை அலங்காரம்' என்பர். (துல்லியம் ஒப்புமை; யோகிதை - கூட்டம்)

**ஒப்புமைக்கூட்ட அணியின் இலக்கணம்**

"கருதிய குணத்தின் மிகுபொருள் உடன் வைத்து ஒருபொருள் உரைப்பது ஒப்புமைக் கூட்டம்," ஒரு பொருளைச் சொல்லுமிடத்துத் தான் கருதிய குணம் முதலியவற்றின் மிகுதியான பொருளைக் கூடவைத்துச் சொல்லுவது ஒப்புமைக் கூட்டம் என்னும் அணியாகும்.

ஒப்புமை கூட்ட அணியின் வகைகள்

"புகழினும் பழிப்பிலும் புலப்படும் அதுவே"

இரண்டு வகைகள்

1. புகழ் ஒப்புமைக் கூட்டம்
2. பழிப்பு ஒப்புமைக் கூட்டம்

**1. புகழ் ஒப்புமைக்கூட்டம்**

புகழத்தக்க பொருள்களை ஒருங்கு கூறுவது புகழ் ஒப்புமைக் கூட்டமாகும்.

**2.பழிப்பு ஒப்புமைக்கூட்டம்**

பழிக்கத்தக்க பொருள்களை ஒருங்கு கூறுவது பழிப்பு ஒப்புடைமைக் கூட்டமாகும்.

**மாறுபடு புகழ்நிலையணி**

கவிஞன் தான் பழிக்கக் கருதிய பொருளைக் கூறாது மற்றொரு பொருளைப் புகழ்ந்து கூறுவான். இதனை மாறுபடு புகழ்நிலை அணி என்பர். இதற்கு 'வஞ்சப்புகழ்ச்சிஅணி', 'தெளிவில் புகழ்ச்சி அணி என்னும் வேறு பெயர்களும் உண்டு. இதனை வடநூலார் 'அப்பிரத்துதப் பிரசஞ்சை அலங்காரம்' என்று கூறுவர்.

**மாறுபடு புகழ்நிலைஅணியின் இலக்கணம்**

**"கருதிய பொருள்தொகுத்து ஆங்குஅது பழித்தற்கு**

**வேறுஒன்று புகழ்வது மாறுபடு புகழ்நிலை"**

ஒருவன் சொல்லக் கருதிய பொருளின் இகழ்ச்சித் தன்மை வெளிப்படுமாறு மற்றொரு பொருளைப் புகழ்ந்துரைப்பது மாறுபடு புகழ்நிலை என்னும் அணியாகும்.

**கழாப் புகழ்ச்சியணி**

ஒன்றைப் பழித்துக் கூறுவது போன்ற தன்மையால் அப்பொருளுக்கு மேம்பாடு தோன்றும்படியாக உரைப்பது புகழாப்புகழ்ச்சி அணியாகும். இதனை வடநூலார் 'வியாசஸ்துதி அலங்காரம்' என்பார்.

**புகழாப் புகழ்ச்சி அணியின் இலக்கணம்**

**“ பழிப்பது போலும் பான்மையின் மேன்மை**

**புலப்பட மொழிவது புகழாப் புகழ்ச்சி”**

ஒன்றனைப் பழித்துக் கூறுவது போன்ற தன்மையான் அதற்கு மேம்பாடு தோன்ற உரைப்பது புகழாப் புகழ்ச்சி என்னும் அணியாகும்.

**வாழ்த்தணி**

இவருக்கு இன்னது பொருத்துக என்று கயிஞன் தாம் நினைத்தது விரித்துச் சொல்லுவது வாழ்த்தணி ஆகும்.

இதனை வடநூலார்'ஆசி' எம் குறிப்பர். தாம் விரும்பிய தன்மை ஒருவருக்குக் கிட்டும்படி விண்ணப்பம் செய்தலே ஆசியாகும்.

**வாழ்த்தணியின் இலக்கணம்**

**“இன்னார்க்கு இன்னது இயைக என்றுதாம்**

**முன்னியது கிளத்தல் வாழ்த்து என மொழிப”**

இன்ன தன்மை உடையார்க்கு இன்னது நிகழ்க என்று கலிஞன் தான் கருதியதனை விதிப்பது

வாழ்ந்து என்னும் அணி என்று சொல்லுவர் புலவர்.

**பாவிகவணி**

- ஒரு பாடலாலோ (குளகம்) பல பாடல்களாலோ (முக்ககூம்) ஆகிய செய்யுள் வகைகளுள் அடங்காமல் தொடர்நிலையாகப் பாடப்பெறுவது வகையாகும்.
- அவ்வகையுள் ஒன்றை முழுவதுமாக கொள்ளப்படுவதாய்க் கவிஞனால் கருதி செய்யப்படுவதே பாவிகம் என்னும் அணியாகும்.

- எடுத்தலோசையால் புவப்படுத்தப்படும் பாவம் என்பதற்குக் கவிஞனுடைய கருத்து என்பது பொருளாகும்.
- இவ்வணி காப்பியத்தின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை வனப்பாக அமைந்திருக்கும் தன்மை உடையது என உரைப்பர்.

**பாவிக அணியின் இலக்கணம்**

**“பாவிகம் என்பது காப்பியப் பண்பே”**

பாவிகம் என்று சொல்லப்படுவது பொருள் தொடர்நிலை செய்யுள்
திறத்தின் கவியால்
கூறிச் செய்யப்படுவதொரு குணமாகும்.

1.பிறனில் விழைவோர் கிளையொடும் கெடுப
2.பொறையில் சிறந்த கவசம் இல்லை
3.வாய்மையில் கடியதோர் வாளி இல்லை.

# அலகு 5

**இரண்டு மதிப்பெண் வினாக்கள்**

1. ஒப்புமைக் கூட்டவணி என்றால் என்ன?
2. ஒப்புமைக் கூட்டவணி யின் இலக்கணம் குறித்து எழுதுக.
3. புகழ் ஒப்புமை கூட்டம் என்றால் என்ன?
4. மாறுபடுபுகழ்நிலையணி என்றால் என்ன?
5. மாறுபடுபுகழ்நிலையணியின் இலக்கணம் குறித்து எழுதுக.
6. புகழாப்புகழ்ச்சி அணி என்றால் என்ன?
7. புகழாப்புகழ்ச்சி அணியின் இலக்கணம் குறித்து எழுதுக.
8. வாழ்த்தணி என்றால் என்ன ?

9.வாழ்த்து அணியின் இலக்கணம் குறித்து எழுதுக.

10. பாவிக அணி என்றால் என்ன?

11.பாவிக அணியின் இலக்கணம் குறித்து எழுதுக.

**ஐந்து மதிப்பெண் வினாக்கள்**

1. ஒப்புமைக் கூட்டவணியினை விளக்கி எழுதுக
2. மாறுபடுபுகழ்நிலையணி குறித்து விளக்கி எழுதுக.
3. புகழாப்புகழ்ச்சி அணி இணை விளக்கி எழுதுக.
4. வாழ்த்து அணியினை விளக்கி எழுதுக
5. பாவிக அணியை விளக்கி எழுதுக.

**பத்து மதிப்பெண் வினாக்கள்**

1. ஒப்புமைக் கூட்டவணி விவரித்து எழுதுக.
2. மாறுபடுபுகழ்நிலையணி குறித்து விவரித்து எழுதுக.
3. வாழ்த்தணியணையும் பாவிகயணையும் விவரிக்க.